**கவனிக்க.-** *2009.08.21 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) மற்றும் பகுதி II என்பன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1617 - 2009 අගෝස්තු මස 28 වැනි සිකුරාදා - 2009.08.28**

*1617 ஆம் இலக்கம் – 2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1068 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1076 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1081 |
| ஏல விற்பனைகள் | 1087 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பததிர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2009, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, ஓகத்து மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணைகள் குத்தகை விற்பனை - 2010

*2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2010 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்போது நிபந்தனைகளுக்கு அமைவாகவும் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும்.*

*2. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.*

*3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையில் இட்டு இடதுபக்கத்தின் மேல் மூலையில் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் "............................................ இலக்க ............................ கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம் 2009.09.22 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் வத்தளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் வத்தளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இடவேண்டும்.*

*4. கேள்விப்பத்திரங்கள் 1982, ஓகத்து 20 ஆந் திகதியன்று 207 ஆம் இலக்க இலங்கை குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைக்கு அமைய இருத்தல் வேண்டும்.*

*5. 2009.09.22 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கைக்காரர்கள் வத்தளை பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.*

*6. குறிப்பிட்ட தினத்தில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய விற்பனை பெறத் தவறும் தவறணைகள் எதுவுமிருப்பின் இவைகளுக்கான விற்பனை மீண்டும் 2009.09.11 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் நடைபெறும்.*

*7. இது விடயமாக மேலதிக விபரங்களை வத்தளை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*பிரதேச செயலாளர்,*
*வத்தளை.*

*பிரதேச செயலாளர் அலுவலகம்,*
*வத்தளை,*
*2009.08.03.*

### அட்டவணை

| இலக்கம் | பிரதேசம் | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்பு பணம் ரூபா |
|---|---|---|---|---|
| 1 | வத்தளை | திம்பிரிகஸ்யாய | 2009.09.22 - மு. ப. 10.30 | 7,260 |
| 2 | வத்தளை | உஸ்வெடகெய்யாவ | 2009.09.22 - மு. ப. 10.30 | 4,840 |
| 3 | வத்தளை | போபிட்டிய | 2009.09.22 - மு. ப. 10.30 | 7,260 |
| 4 | வத்தளை | தஹவத்த | 2009.09.22 - மு. ப. 10.30 | 6,050 |

8-555

**வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளு தவறணைகள் குத்தகை விற்பனை - 2010**

*1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதியிட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளதும், 1983 ஆம் ஆண்டிலும் அதற்கு பிந்திய கால எல்லைகளிலும் இதில் காணப்படும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தவறணைக்கான குத்தகைக்கொடுத்தல் காலப்பகுதியில், இவ்வறிவுறுத்தலுக்கு, அமைய 2010 இல் கீழ்க்காணப்படும் கள்ளு தவறணைகள் குத்தகை விற்பனைக்கு தனிநபர்களுக்கான சில்லறை விற்பனைக்கு கொடுப்பதற்கான உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கான கேள்விகள், 2009.09.08 ஆந் திகதி, அட்டவணையில் குறிப்பிட்ட நேரத்தில் கேள்விப்பத்திரம் வலப்பனை பிரதேச செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. (அ) இத்தகவல்கள் இலங்கையில் அனைத்துப் பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெறப்படும் குறிப்பிட்ட படிவத்தில் மாத்திரம் கேள்விகள் யாவும் அனுப்பப்படல் வேண்டும் ;*

*(ஆ) அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்த ஒரு பிரதேச அலுவலகத்திலும் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்;*

*(இ) பிரதேச செயலாளர் வழங்கிய கேள்விதாரரின் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சியும், கேள்வி பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும். கேள்விகளும் பெறுமதிமிக்க அத்தாட்சிப்பத்திரம், சமர்ப்பிக்கும்போது கள்ளு தவறணைக்கான நிபந்தனைக்குட்பட்டவராக கேள்விக்காரர் இருத்தல் வேண்டும் ;*

*(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும்போது கேள்விக்காரர் கீழ்க்காணும் அறிவுறுத்தல்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.*

(I) *கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித் தொகை எழுத்திலும், இலக்கத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும் ;*

(II) *பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் கையொப்பம் இட்டு சாட்சிகளின் அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும் ;*

(III) *கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படின் கேள்விக்காரரின் முழுமையான கையொப்பத்தையும், திகதியையும் இட்டு உறுதிப்படுத்த வேண்டும் ;*

(IV) *சகல தகவல்களும் பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்துடன் கேள்விக்காரர்கள் தமது அடையாள அட்டையையும் சமர்ப்பித்தல் வேண்டும்.*

**மேற்படி நிபந்தனைக்குட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்து செய்யப்படும்.**

*3. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப் பத்திரத்திற்கான வைப்பு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு பெறுமதி சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரை இடப்பட்ட உறையின் இடதுபக்க மேல்மூலையில் தவறணைக்கான பெயரையும் இலக்கத்தையும் குறிப்பிட்டு வலப்பனை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் கேள்விகள் பெறப்பட வேண்டிய கால எல்லைகளுக்குள் இடப்படல் வேண்டும். தபால் மூலம் கேள்விகளை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் தபாலில் வலப்பனை பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.*

*4. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி கால எல்லை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தருணத்தில் கேள்விகாரர்கள் வலப்பனை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.*

*5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தை ஏற்கவோ நிராகரிக்கவோ வலப்பனை பிரதேச செயலாளருக்கு அதிகாரம் உண்டு.*

*6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் விற்பனை தினத்தன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன் வலப்பனை பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட 3 மாத தவணைக்கு மேற்படாத பிணைப்பணமாக வலப்பனை பிரதேச செயலாளருக்கு செலுத்த வேண்டும். மேற்படி வைப்புப்பணம் நில்தண்டாஹின்ன இலங்கை வங்கிக் கணக்கில் பிரதேச செயலாளர் கணக்கின் பெயரால் வைப்புச் செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணம் இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்படும் பாதுகாப்பான காசோலை மூலமாக செலுத்தப்படல் வேண்டும். தேவையான முத்திரைகளை செலுத்தி குத்தகைக்காரர் நிபந்தனைகளிலும் ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடல் வேண்டும்.*

*7. நியமிக்கும் தவணைக் கட்டணம் மாதாந்தம் காசாக செலுத்துபவர் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் தகைமை உடையவர் ஆவார்.*

*8. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரி தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.*

*9. மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத தவறணைகள் 2009.11.03 ஆந் திகதி முற்பகல் 10.30 மணியளவில் விற்பனை செய்யப்படும்.*

10. மேற்படி தவறணைகள் குத்தகை கொடுப்பது சம்பந்தமான இறுதி தீர்மானம் பிரதேச செயலாளருடையதாகும்.

11. தவறணை குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஆர். எம். பீ. எல். ரத்னாயக்க,
பிரதேச செயலாளர்,
வலப்பனை.

பிரதேச செயலகம்,
வலப்பனை.
2009.07.28.

**அட்டவணை**

கள்ளுத் தவறணைகள்

| இல. | தவறணையின் பெயர் | தவறணை நிறுவப்பட வேண்டிய இடம் | கேள்விப்பத்திரம் பெறப்படும கால எல்லையும் நேரமும் | கேள்விப்பத்திர பிணைப்பணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | இல. 04 ஹரஸ்பெத்த | ஹரஸ்பெத்த கிராமம் | 2009.09.08 மு. ப. 10.30 | 5,000 |
| 02 | இல. 05 பதியபெலல்ல | புதியபெலல்ல கிராமம் | 2009.09.08 மு. ப. 10.30 | 5,000 |

8-567

---

**உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளு தவறணைகளை குத்தகைக்கு வழங்கல் - 2010**

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதியிட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப் பகுதிக்கும், ஏற்புடையதான கள்ளு தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும், அக்காலப் பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2010 ஆம் ஆண்டில் கள்ளு சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2009.09.14 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் காணப்படும் பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்,

(அ) கேள்விப் பிணைப்பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டு குறித்த பிணைப் பணத் தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும்,

(ஆ) கேள்விக்காரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழையும் குறிப்பிட்ட கள்ளு தவறணை விற்கும் நிபந்தனைகளில் அடங்கியுள்ள நியதிகளை முறையாக கடைப்பிடிக்க வேண்டும் என்பதை கேள்விகளை சமர்ப்பிப்பவர்களுக்கு இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகிறது :

(i) கேள்விப்பத்திரங்களை முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும் போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை எண்ணில் மாத்திரம் அன்றி எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும் ;

(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்க கையொப்பமும் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப் பத்திரம்.-

(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டு ;

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழ்.

இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தவறணையின் இலக்கமும் பெயரும் குறித்த உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவடைவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிட்டால் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளும் காலவரையறை முடிவடைவதற்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருக்க வேண்டும்.

5. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரரின் "சிறப்புரிமைகளை வாங்கியவர்" என பிரகடனப்படுத்தப்பட்டு பின் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய கள்ளு தவறணைகள் விற்பனை செய்யும் நிபந்தனைக்கொத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியிலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினாலோ அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய இயலாத தவறணை குத்தகைகள் 2009.11.09 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனைக்கு விடப்படும். அன்றைய தினம் கேள்விகள் முன் வைப்பதற்கான தேவைப்பாடுகள் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

7. மேலதிக விபரங்களுக்கு இவ்வலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

பி. எம். நிமல் பாலசூரிய,
உடபலாத்த பிரதேச செயலாளர்.

உடபலாத்த பிரதேச செயலகம்,
கம்பளை,
2009, ஓகத்து 11.

**அட்டவணை**

2010 ஆம் ஆண்டிற்கு கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவிற்கு அங்கீகரிக்கப்பட்ட கள்ளு தவறணைகளின் பட்டியல்

| தொடர் இலக்கமும் பிரிவு பெயரும் | தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறந்திருக்க வேண்டிய நேரம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புத் தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1. வஹுகபிட்டிய | உடபலாத்த வஹுகபிட்டிய கிராமத்திற்குள் | மு. ப. 11.00 மணியிலிருந்து பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணியிலிருந்து பி. ப. 8.00 மணி வரை | 2009.09.14 மு. ப. 10.30 மணி வரை | 1,500 |
| 2. புஸ்ஸல்லாவ | உடபலாத்த புஸ்ஸல்லாவ நகரத்தின் எல்லைக்குள் | மு. ப. 11.00 மணியிலிருந்து பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணியிலிருந்து பி. ப. 8.00 மணி வரை | 2009.09.14 மு. ப. 10.30 மணி வரை | 3,000 |

8-584/1

---

**அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கள்ளுத்தவறணை குத்தகைக்கு விற்பனை - 2010**

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதியிட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளதும் 1983 ஆம் ஆண்டிலும் அதற்கு பிந்திய கால எல்லைக்குள் இங்கு காணப்படும் அடட்வணையில் குறிப்பிடப்பட்டுள்ள தவறணைகள் குத்தகைக்கு கொடுத்தல், 2010 காலப்பகுதிக்குள் நிபந்தனைகளுக்கமைய கள்ளுத்தவறணைகள் தனிநபருக்கான சில்லறை

விற்பனைக் குத்தகைக் கொடுப்பனவுக்கான உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கான கேள்விகள் 2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள நேரம் வரை அம்பகமுவ பிரதேச செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. (அ) அனைத்து கேள்விப்பத்திரங்களும் ஏதேனும் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட முறையான விண்ணப்ப படிவமாக இருத்தல் வேண்டும்.

(ஆ) நிரந்தர வைப்பு பணமாக அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலகத்திலாவது செலுத்தி அதன் பற்றுச்சீட்டை இணைக்கப்படல் வேண்டும்.

(இ) பிராந்திய மேலதிக அரசாங்க அதிபரால்/பிரதேச செயலாளரால் வழங்கிய, கேள்வி தாளில் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான பெறுமதிக்கான அத்தாட்சிப்பத்திரம் கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அசைவற்ற ஆதனங்களின் அத்தாட்சிப்பத்திரத்தை சமர்ப்பிக்கும்போது கள்ளுத்தவறணைகள் நிபந்தனைகளுக்குட்பட்டவராக கேள்விதாரர் இருத்தல் வேண்டும்.

(ஈ) கேள்விப்பத்திரங்கள் நிரப்பும்போது கேள்விதாரர் கீழ்காணும் முக்கியத்துவங்களை கருத்தில் கொள்ள வேண்டும்:-

(1) கேள்விப்பத்திரத்தை முழுமையாக நிரப்புதல் வேண்டும். கேள்வித்தொகை எழுத்திலும், இலக்கத்திலும் குறிப்பிடல் வேண்டும் ;

(2) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரமானது கையொப்பமிடும் சாட்சிகளது தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும் ;

(3) கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படின் கேள்விதாரரின் முழுமையான கையொப்பத்தையும், திகதியையும் உறுதிப்படுத்தல் வேண்டும்;

(4) சிறப்புரிமை பெற்ற கேள்விதாரர்கள் தமது தேசிய அடையாள அட்டையை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

நிபந்தனைகளுக்கு உட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

3. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம் கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டு பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது மேல் மூலையில் தவறணைக்கான பெயரையும், இலக்கத்தையும் குறிப்பிட்டு அம்பகமுவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் கேள்விகள் செய்யப்படவேண்டிய கால எல்லைக்குள் இடப்பட வேண்டும். தபாலில் கேள்விகளை சமர்ப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட கால எல்லை முடிவடைவதற்குள் பதிவு தபாலில் அம்பகமுவ பிரதேச செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிக் கால எல்லை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நேரத்திற்கு கேள்விக்காரர்கள் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. எந்த ஒரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ மறுக்கவோ பிரதேச செயலாளருககு அதிகாரம் உண்டு.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர்கள் விற்பனை தினத்தன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன் அம்பகமுவ பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட மூன்று மாத விற்பனைக்கு குறையாத பிணைப்பணமாக அம்பகமுவ பிரதேச செயலகத்தில் செலுத்த வேண்டும். மேற்படி வைப்புப் பணம் "பிரதேச செயலாளர்" என்ற பெயரில் கினிகத்தேனை மக்கள் வங்கியில் நிரந்தர சேமிப்பு கணக்கில் வைப்புச் செய்ய குத்தகைக்காரர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணம் காசாகவோ அல்லது காசோலை அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்பட்ட பாதுகாப்பான காசோலை மூலமாகவோ செலுத்தப்பட வேண்டும். தேவையான முத்திரைகளை செலுத்தி குத்தகைக்காரர்கள் நிபந்தனைகளினதும் ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடல் வேண்டும்.

7. நியமிக்கும் தவணைக் கட்டணம் மாதாந்த காசாக செலுத்துபவர் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

8. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியையும் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

9. மேற்படி திகதியில் குத்தகைத் தவறணைகள் கொடுக்கப்படாத பட்சத்தில் 2009.10.29 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீள் விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு கொடுப்பது சம்பந்தமாக முடிவான தீர்மானம் பிரதேச செயலாளருடையதாகும்.

11. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் அம்பகமுவ கோரளை பிரதேச செயலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

டபிள்யு. எம். குணவர்தன,
பிரதேச செயலாளர்,
அம்பகமுவ கோரளை.

அம்பகமுவ கோரளை,
பிரதேச செயலகம்,
2009, ஓகத்து 07.

அட்டவணை

| இலக்கமும் தவறணையின் பெயரும் | தவறணை நிறுவப்பட வேண்டிய இடம் | கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளப்படும் கால எல்லை | பிணைப்பணம் ரூபா |
|---|---|---|---|
| 01. நோர்வுட் | நோர்வுட் நகர எல்லையில் 3 ஆம் இலக்க வட்டாரத்திற்குட் பட்ட பிரதேசம் | 2009.09.03 மு. ப. 10.30 | 3,000 |
| 02. டிக்கோயா | ஹட்டன் டிக்கோயா நகர எல்லையில் 4 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2009.09.03 மு. ப. 10.30 | 3,000 |
| 03. டிக்கோயா | ஹட்டன் டிக்கோயா நகர எல்லையில் 5 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2009.09.03 மு. ப. 10.30 | 3,000 |

8-627

---

எனது இல. : நீ. கொ./03/01/கள்ளுத்தவறணை குத்தகை/2010

## நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை – 2010

1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை நிபந்தனைகள் மற்றும் தற்போதைய எல்லா மதுவரி உத்தரவுப்பத்திரம் சம்பந்தமான ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது நிபந்தனைகள் பிரகாரம் கள்ளு சில்லறை விற்பனைக்கான கீழ்க்காணப்படும் கள்ளுத்தவறணைகளுக்குரிய கேள்விப்பத்திரங்கள் 2009, சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2009, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரைக்கான தனி நபர் உரிமைக்கான வெளிவிற்பனைக்குரிய கேள்விப்பத்திரம் 2008.09.19 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கள்ளுத்தவறணைக்குரிய கேள்வி விண்ணப்பிப்பவர்கள் இலங்கையின் எந்தப் பிரதேச செயலகத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளக்கூடிய கேள்வி விண்ணப்ப மாதிரிப்படிவத்தினை முறையே பூரணப்படுத்தி இங்கு பிரகடனப்படுத்தப்பட்ட கள்ளுத் தவறணைக்காக அனுமதி வழங்கியிருக்கும் பிரகாரம் செயலகத்தில் பணம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் கள்ளு கேள்வி ஒப்பந்தப் பிரகாரம் பெற்றுக்கொண்ட தகைமைப்பத்திரத்துடன் சேர்த்து முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு அதன் இடதுபுற மேல் மூலையில் தாங்கள் சமர்ப்பிக்கும் கேள்விக்குரிய கள்ளுக்கடையின் பெயரும் இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு முறையே ஒவ்வொரு கள்ளுக்கடைக்குமாக இங்கு குறிப்பிடப்பட்ட கேள்வி சமர்ப்பிக்கும் கடைசி நேரத்திற்கு முன்பாக பதிவுத்தபால் மூலமாக அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இட்டாகிலும் பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் கேள்வி விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தும்போது எல்லாவிதமான மாற்றங்களுக்கும் எதிரே தங்கள் பூரண கையொப்பமிட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். அப்படிச் செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினமான 2009.09.24 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு எல்லா விண்ணப்பதாரிகளும் நீர்கொழும்பு பிரதேச செயலகத்தில் பிரசன்னமாயிருத்தல் வேண்டும். வெளிநாட்டு குடிவகை குத்தகை 2009.09.25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

5. ஏதாவது கேள்விப்பத்திரத்தில் சரியான விபரங்கள் தரப்பட்டிராதவிடத்து விண்ணப்பங்கள் யாவற்றையும் நிராகரிக்கும் உரிமை எனக்குண்டு.

6. ஏற்கனவே மேற்கூறப்பட்ட தினத்தில் விற்பனை செய்யமுடியாத கள்ளுத்தவறணைகள் 2009.11.18 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீள் விற்பனை செய்யப்படும் அன்றைய தினம் சமர்ப்பிக்கும் கேள்விகள் வர்த்தமானப்பத்திரிகையில் வெளியிடப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப அமைதல் வேண்டும். வெளிநாட்டு குடிவகை குத்தகை மீண்டும் விற்பனை செய்வது 2009.11.19 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

7. ஒரு குறிப்பிடப்பட்ட கள்ளுத்தவறணையின் கொள்வனவாளர் என பிரகடனப்படுத்தப்படுகின்ற வெற்றிபெற்ற கேள்விதாரர் விற்பனை தினத்தன்று பி. ப. 2.00 மணிக்கு முன்னதாக என்னால் நியமிக்கப்படும் தொகையான மூன்று மாத கேள்விப்பங்குத் தொகைக்கு அதிகமான முற்பணத் தொகையை எனக்கு செலுத்தி கள்ளுக்கடை சம்பந்தமான ஒப்பந்தப்பத்திரத்தில் கையொப்பமிடப்படல் வேண்டும்.

8. கேள்வி சமர்ப்பிக்கும்போது வேறு ஏதாவது விபரங்கள் தேவைப்படுமாயின் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

9. கேள்வி விற்பனை சம்பந்தமாக நான் எடுக்கும் தீர்வே இறுதித் தீர்வாகும்.

டபிள்யூ. பீ. எம். ஜீ. ஆர். எஸ். கே. முஹந்திரம்,
பிரதேச செயலாளர்,
நீர்கொழும்பு.

**நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2010**

| கள்ளுத் தவறணையின் இலக்கமும் பெயரும் | பிரிவு | கள்ளுத் தவறணை அமைந்திருக்கும் உள்ளூர் பிரிவு | கள்ளுத் தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்வி வைப்புத் தொகை ரூபா | கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|
| 1. இல. 11 - பசியாவத்தை | நீர்கொழும்பு | பசியாவத்த ஊர் மட்டும் | காலை 11.00 முதல் பி. ப. 2.00 வரை<br>பி. ப. 5.00 முதல் பி. ப. 8.00 வரை | 5,000 | 2009.09.24 மு. ப. 10.30 |
| 2. இல. 12 - பிட்டிபனை | நீர்கொழும்பு | பிட்டிபனை ஊர் மட்டும் | காலை 11.00 முதல் பி. ப. 2.00 வரை<br>பி. ப. 5.00 முதல் பி. ப. 8.00 வரை | 5,000 | 2009.09.24 மு. ப. 10.30 |
| 3. இல. 15 - குரணை | நீர்கொழும்பு | குரணை ஊர் மட்டும் | காலை 11.00 முதல் பி. ப. 2.00 வரை<br>பி. ப. 5.00 முதல் பி. ப. 8.00 வரை | 5,000 | 2009.09.24 மு. ப. 10.30 |
| 4. இல. 16 - காமச்சோடை | நீர்கொழும்பு | காமச்சோடை ஊர் மட்டும் | காலை 11.00 முதல் பி. ப. 2.00 வரை<br>பி. ப. 5.00 முதல் பி. ப. 8.00 வரை | 5,000 | 2009.09.24 மு. ப. 10.30 |
| 5. இல. 17 - உடயார்தோப்பு | நீர்கொழும்பு | உடயார் தோப்பு ஊர் மட்டும் | காலை 11.00 முதல் பி. ப. 2.00 வரை<br>பி. ப. 5.00 முதல் பி. ப. 8.00 வரை | 5,000 | 2009.09.24 மு. ப. 10.30 |
| 6. இல. 18 - குடாபாடுவ | நீர்கொழும்பு | குடாபாடுவ ஊர் மட்டும் | காலை 11.00 முதல் பி. ப. 2.00 வரை<br>பி. ப. 5.00 முதல் பி. ப. 8.00 வரை | 1,000 | 2009.09.24 மு. ப. 10.30 |
| 7. இல. 19 - தளுபத்த | நீர்கொழும்பு | தளுபத்த ஊர் மட்டும் | காலை 11.00 முதல் பி. ப. 2.00 வரை<br>பி. ப. 5.00 முதல் பி. ப. 8.00 வரை | 5,000 | 2009.09.24 மு. ப. 10.30 |
| 8. இல. 20 - போருதொட்ட | நீர்கொழும்பு | போருதொட்ட ஊர் மட்டும் | காலை 11.00 முதல் பி. ப. 2.00 வரை<br>பி. ப. 5.00 முதல் பி. ப. 8.00 வரை | 3,000 | 2009.09.24 மு. ப. 10.30 |
| 9. இல. 22 - பலங்கதுறை | நீர்கொழும்பு | பலங்கதுறை ஊர் மட்டும் | காலை 11.00 முதல் பி. ப. 2.00 வரை<br>பி. ப. 5.00 முதல் பி. ப. 8.00 வரை | 1,500 | 2009.09.24 மு. ப. 10.30 |
| 10. இல. 21 - கொச்சிக்கடை | நீர்கொழும்பு | கொச்சிக்கடை ஊர் மட்டும் | காலை 11.00 முதல் பி. ப. 2.00 வரை<br>பி. ப. 5.00 முதல் பி. ப. 8.00 வரை | 3,000 | 2009.09.24 மு. ப. 10.30 |
| 11. இல. 10 - செத்தப்பாடுவ | நீர்கொழும்பு | செத்தப்பாடுவ ஊர் மட்டும் | காலை 11.00 முதல் பி. ப. 2.00 வரை<br>பி. ப. 5.00 முதல் பி. ப. 8.00 வரை | 5,000 | 2009.09.24 மு. ப. 10.30 |

8-661

---

## கண்டி கடவத்சத்தர கங்க வட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவுக்குள் கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2010

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதியிட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்பட்ட (பிரசுரிக்கப்பட்ட) 1983 ஆம் வருடத்திற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதாக கள்ளுத் தவ றணைகள் குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும் அக்காலப் பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப் பத்திரங்களுக்கும்

பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2010 ஆம் வருடத்தில் கள்ளு சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளராகிய என்னால் 2009.09.09 ஆந் திகதி முற்பகல் 10.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் காணப்படும் பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்,

(அ) கேள்விப் வைப்புப் பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட குறித்த கேள்விப்பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும்,

(ஆ) கேள்விக்காரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடம் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் கேள்விப் பத்திரத்துடன் முன்வைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களையும் சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் முன் வைக்கும் கேள்விக்காரர்கள் மேற்படி கள்ளுத் தவறணைகளை விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைக் கொத்தில் அடங்கிய கட்டளைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது கேள்விப் பத்திரங்களை நிரப்பும்போது கேள்விக்காரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர் பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்.

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடும் தொகையை எண்ணில் மாத்திரமன்றி எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்க ஒப்பத்துடன் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

(iv) பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரத்தை கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட -

(அ) பிரதேச செயலகப் பற்றுச்சீட்டுடனும்,

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும்,

இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு அந்த கடித உறையின் இடதுபக்க மேல் முனையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறித்து கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிடின் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவதற்கு முன்பு கண்டிப் பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. குத்தகை தொடர்பாக கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விக்காரரும் கண்டி பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. திருப்தியாக கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரர், சிறப்புரிமைகளை வாங்கியவர் என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய தினம் பி. ப. 2.30 மணிக்கு முன்பு கண்டி பிரதேச செயலாளரினால் விதிக் கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக கண்டி பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய கள்ளுத் தவறணைகள் நிபந்தனைக்கொத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப் பனவை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கியொன்றில் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" என குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியினாலோ, மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையி னாலோ அல்லது வங்கியொன்றினால் அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

6. கள்ளுத் தவறணைகளினாலோ வேறு வலுவுடைய அனுமதிப்பத்திரங்களையுடைய நிலையங்களினாலோ விற்பனைக்காக மொத்தமாக (பீப்பாய்க்கணக்கில்) கள் குடிவகை விநியோகிக்கப்பட மாட்டாது என்பதை கவனத்திற் கொள்ளவும்.

7. பாதுகாப்பு காரணமாக கண்டி எசல பெரஹரா நடைபெறும் காலங்களில் இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் இல. 01 வட்டபுலுவ கள்ளுத் தவறணையை தற்காலிகமாக மூடுவதற்குரிய கட்டளையை என்னால் பிறப்பிக்க வேண்டி ஏற்பட்டால் அவ்வாறு தவறணையை மூடிய காலம் தொடர்பாக குத்தகை வாரத்தில் சலுகை ஏற்பாடு ஏதும் செய்யப்படமாட்டாது.

8. குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்யமுடியாதுபோன கள்ளுத் தவறணை குத்தகைகள் 2009.11.04 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்கள் முன்வைப்பதற்கான தேவைப்பாடுகள் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

9. மேலதிக விபரங்களை இக்காரியாலயத்தில் கேட்டு அறிந்து கொள்ளலாம்

டி. எம். எஸ். பீ. தென்னகோன்,
பிரதேச செயலாளர்,
கண்டி கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை,
2009.08.04.

**அட்டவணை**

**கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளையில் அனுமதியளிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளின் பட்டியல் - 2010**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணையை அமைக்கவேண்டிய பிரிவு | தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்விப் பத்திரங்களை (டென்டர்) ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| இல. 01 வட்டபுலுவ | கண்டி பிரிவில் இல. 20, மாயாவ மற்றும் இல. 07 மாபனாவதுர தேர்தல் பிரிவு | கட்டுகஸ்தொட்டை வீதியில் அந்த வீதியும் திருகோணமலை வீதி சந்தியில் கட்டுகஸ்தொட்டை வீதியும் வட்டாரந்தென்ன சந்திக்கும் இடையிலான பாதை கண்டி மாநகரில் இல. 20 - மாயாவ மற்றும் இல. 7 - மாபனாவதுர தேர்தல் பிரிவில் அமைந் துள்ள பிரதேசம் | மு. ப. 11.00 தொடக்கம் பி. ப. 2.00 மணிவரை மற்றும் பி. ப. 5.00 தொடக்கம் பி. ப. 8.00 மணி வரை | 2009.09.09 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை |

கள்ளுத்தவறணை குத்தகை கேள்விகளுக்கான இறுப்புப்பணம் - ரூபா 5,000

8-700/1

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணி உறுதிப்பத்திரத்தை நிராகரித்தல்

வென்னப்புவை, நயினமடத்தை வசிப்பிடமாகக் கொண்ட பிரசித்த நொத்தாரிசு ஐ. சீ. களுவாரச்சி அவர்களால் 1998.09.14 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 62 ஐக் கொண்ட சட்ட உரிமைப் பத்திரத்தின் பிரகாரம் வென்னப்புவை, தெற்கு உள்ஹிடியாவ, "கிறிஸ்மலி" இல் வசிக்கும் வர்ணகுலசூரிய இனோகா ஷாமலி கொஸ்தா அவர்களினால், வென்னப்புவை கொழின்ஜாடிய, "குமாரி நிவச" இல் வசிக்கும் வீரக்கொடி ஆரச்சிகே அன்டன் ஜோசப் சில்வா அவர்களுக்கு பொறுப்பு அளிக்கப்பட்ட அனைத்து சொத்துக்கள் தொடர்பான அட்டோர்ணி உறுதிப்பத்திரம் நிராகரிக்கப்பட்டுள்ளதென அனைத்து மக்களுக்கும் இத்தால் தெரியப்படுத்துகிறோம்.

டபிள்யூ. ஐ. ஷாமலி கொஸ்தா.

8-558

## அட்டோர்ணி உறுதிப்பத்திரத்தை நிராகரித்தல்

வென்னப்புவை, நயினமடத்தை வசிப்பிடமாகக் கொண்ட பிரசித்த நொத்தாரிசு ஐ. சீ. களுவாரச்சி அவர்களால் 1998.09.14 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 61 ஐக் கொண்ட சட்ட உரிமைப் பத்திரத்தின் பிரகாரம் வென்னப்புவை, கொழின்ஜாடிய, "குமாரி நிவச" இல் வசிக்கும் குரணகே ஹாட்மன் கெனடி கிறிஸ்டோபர் பெரேரா அவர்களினால் வென்னப்புவை கொழின்ஜாடிய, "குமாரி நிவச" இல் வசிக்கும் வர்ணகுலசூரிய நிர்மலி பர்ணதெத் பியங்கா கொஸ்தா அவர்களுக்கு பொறுப்பு அளிக்கப்பட்ட அனைத்து சொத்துக்கள் தொடர்பான அட்டோர்ணி உறுதிப்பத்திரம் நிராகரிக்கப்பட்டுள்ளதென அனைத்து மக்களுக்கும் இத்தால் தெரியப்படுத்துகிறோம்.

கே. எச். கே. கிறிஸ்டோபர் பெரேரா.

8-559

## அட்டோர்ணி அதிகாரத்தை இரத்துச்செய்தல்

குருணாகலை, வதுராகலை எல்வத்த பிளேஸ் இல் வசிக்கும் மிரிஸ்ஸ லங்காகெ நதுன் கீதரத்ன ஆகிய நான், கம்பஹா பிரசித்த நொத்தாரிசு என். சரோஜனி வன்னிஆரச்சி மூலம் நற்சான்று வழங்கப்பட்ட 2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி இல. 759 ஐக் கொண்ட அட்டோர்ணி அதிகாரம் மூலம் கடவத்தை, இஹலகரகஹா முலை, இராஜஸிங்க மாவத்தை, இல. 348/23 இல் வசிக்கும் துஷானி லக்ஷிகா கீதரத்ன விவாகத்துக்கு முன் மஹதுகொட ஆரச்சிகே துஷானி லக்ஷிகா பெரேரா என்பவருக்கு கொடுக்கப்பட்டிருந்த அதிகாரத்தை இரத்துச்செய்து தள்ளுபடி செய்வதாக இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

மிரிஸ்ஸ லங்காகே நதுன் கீதரத்ன.

8-573

---

## கம்பனியின் பெயர் மாற்றம் பற்றிய பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி 2009, யூலை 23 ஆந் திகதி முதல் பெயர் மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

பழைய பெயர் : லங்கா இன்டர்நெட் சேர்விஸஸ் லிமிடெட்
புதிய பெயர் : வேவ்கொம் வயர்லஸ் லிமிடெட்
கம்பனி இலக்கம் : பீபி999
பதிவு முகவரி : 9சி, டவர் பில்டிங், ஸ்டேஷன் றோட், கொழும்பு 04

கோர்ப்பரேட் எட்வைஸரி சேர்விஸஸ்
(பிறைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-574

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

### 242 (3) (பி) இன் பிரிவின் நியதிகளின்படியான அறிவித்தல்

பெஷன் டிரென்ட் பிரைவட் லிமிடெட் (பிவி 2552) மற்றும் எக்செல் க்லோதிங் பிரைவேட் லிமிடெட் (பிவி 2436) எனப்படும் இவ்விரு நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயல்படுவதற்காக தீர்மானிக்கப் பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட விலாசம் : இல. 225/1, வொக்ஷால் வீதி, கொழும்பு 02

அருணி சென்டர்ஸ்
நிறுவனத்தின் செயலாளர்.

8-575

---

## பகர ஆள் செயலுரிமைப்பத்திரத்தை (அட்டோர்ணி தத்துவம்) இரத்துச்செய்வது சம்பந்தமான அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் காலி மாவட்டத்தின் கலேகான, வீ. சீ. வீதி, இல. 19 என்ற முகவரியில் வசிக்கும் ஹல்லல சீமன் மேறு பதிரனகே பிரீதி என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த காலியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திரு. ருவன்புர சம்பத் சுஜீவ அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட 651 ஆம் இலக்க பகர ஆள் செயலுரிமைப் பத்திரத்தை (அட்டோர்ணி தத்துவம்) 2009.08.01 ஆந் திகதி முதல் நடைமுறையாகும்படி இரத்துச்செய்து நீக்கப்பட்டு உள்ளதாக பகர ஆள் செயலுரிமைப்பத்திர (அட்டோர்ணி தத்துவம்) சட்டத்தின் 4 ஆம் உறுப்புரையின்கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

சுமித் ஆனந்த அத்துகோரல.

2009.08.06.

8-576

---

## கூட்டிணைப்பு பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவுக்கு அமைய இந்த அறிவித்தல் விடுக்கப்படுகிறது :

கம்பனியின் பெயர் : ஹேமாஸ் இன்டர்நஷனல் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ68558
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009, யூலை 24
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 36, பிறிஸ்டல் வீதி, கொழும்பு 01

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

ஹேமாஸ் கோப்பரேட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிடெட்,
செயலாளர்கள்.

8-580

---

## பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் கூட்டிணைப்பு பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(1) இன்கீழ் அறிவித்தல் தரப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : குலேபல் ரீச் கன்சல்டன் (பிரைவேட்) லிமிடெட்
கம்பனியின் பதிவு இலக்கமும் திகதியும் : பீவீ68426, 2009, யூலை 14.
பதிவுசெய்யப்பட்ட முகவரி இல. : இல. 27, சென். பீட்டஸ் பிளேஸ், கொழும்பு 04

பணிப்பாளர் நாயகத்தின் கட்டளைப்படி.

8-581

---

## அட்டோர்ணித் தத்துவத்தை இல்லாதாக்குதல்

கொட்டாவை, ஹொரண வீதியிலுள்ள 182/5 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த வீரஹன்னடிகே சுனேத்ரா பிரியாணி பர்ணாந்து ஆகிய நான், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். ஏ. வசந்த குமார என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, மே 23 ஆந் திகதிய

11 ஆம் இலக்கத்தைக் கொண்ட அற்றோணித் தத்துவத்தினால் மிரிஸ்ஸ, மிரியகந்தவைச் சேர்ந்த வீரஹன்னடிகே மாலா தர்ஷனி பர்ணாந்து என்பவருக்கு என்னால் அளிக்கப்பட்ட எல்லா அதிகாரங்களையும் இத்தால் இல்லாதொழித்து, இல்லாதாக்கி வெற்றானவையாக்குகின்றேன் எனவும் என்னால் அளிக்கப்பட்ட வேறெல்லா அதிகாரங்களையும் இல்லாதொழித்து இல்லாததாக்குகின்றேன் எனவும் சொல்லப்பட்ட வீரஹன்னடிகே மாலா தர்ஷனி பர்ணாந்து என்பவர் இதனகத்துப் பின்னர் எனது பெயரில் எனது சார்பில் ஏதேனும் நடவடிக்கைக்கு அல்லது கொடுக்கல் வாங்கலுக்கு அதிகாரமெதனையும் கொண்டிருக்க மாட்டார் எனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

வீரஹன்னடிகே சுனேத்ரா பிரியாணி பர்ணாந்து.

இல. 182/5, ஹொரண வீதி,
கொட்டாவை,
2009, ஓகத்து 7.

8-582

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவின் கீழான அறிவித்தல்

*கம்பனியின் பெயர்* : நிமாகா இன்டர்நெஷனல் டிரேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ68052
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2009, யூன் 9
*பதிவு அலுவலக முகவரி* : இல. 44/3, மீடியல் றோட், இரத்மலானை

கோர்ப்பரேட் மெனேஸ்மன்ட் கன்சல்டன்ஸ்
அன்ட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

8-591

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் கீழான அறிவித்தல்

பெயர் மாற்றம்

என். சந்தரரத்ன (டெகோரேட்டர்ஸ்) (பிறைவேட்) லிமிட்டெட் எனும் பெயரானது என். சந்தரரத்ன டெகோ ரேட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என மாற்றப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

கம்பனியின் விபரங்கள் பின்வருமாறு :

*(1) கம்பனியின் பழைய பெயர்* : என். சந்தரரத்ன (டெகோ ரேட்டர்ஸ்) (பிறைவேட்) லிமிட்டெட்
*(2) கம்பனியின் இலக்கம்* : பீவீ2535
*(3) கம்பனியின் அலுவலக பதிவு முகவரி* : இல. 205, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10
*(4) கம்பனியின் புதிய பெயர்* : என். சந்தரரத்ன டெகோ ரேட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் மெனேஜ்மன்ட் கன்சல்டன்ஸ்
அன்ட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 5/6, பொலிஸ் பார்க் டெரஸ்,
கொழும்பு 05.

8-592

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் தனியார் பொறுப்பு வரையறுத்த கம்பனி 2009.07.23 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

*கம்பனியின் பெயர்* : எல். என். டி. பிளாண்டேசன் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ68549
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : 198பி, ஞானேந்திர மாவத்தை, நாவல

எஸ். ஜே. கோர்ப்பரேட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

லெவல் 04, இல. 2, காசல் லேன்,
கொழும்பு 04.

8-596

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவிற்கமைய கீழே குறிப்பிடப்படும் கம்பனி கூட்டிணைக்கப்படுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

*கம்பனியின் பெயர்* : டயமன்ட் ட்ரீம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவு இலக்கம்* : பீவீ68458
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2009, யூலை 16
*பதிவு அலுவலகம்* : இல. 142/ 55ஏ, அன்டர்சன் றோட், ஜன்சென்வத்த, நெதிமால, தெஹிவளை

சஹய கோர்ப்பரேட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 23ஏ 1/1, சுலைமான் அவெனியூ,
கொழும்பு 05.

8-607

## அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

கண்டி அநகாரிக தர்மபால வீதி, இலக்கம் 134/9 என்னும் இடத்தில் வதியும் அலுத்கெதர ரத்நாயக்க முதியன்செலாகே நந்தாகுமாரி எனும் நான் கண்டி, அநகாரிக தர்மபால வீதி, இலக்கம் 134/9சி எனும் இடத்தில் வதியும் அலுத்கெதர ரத்நாயக்க முதியான்சலாகே லாலித என்பவருக்கு கண்டி பிரசித்த நொத்தாரிசு டி. ஆர். காமினி ஜினசேன என்பவரால் உறுதிசெய்யப்பட்ட 2002.12.24 ஆந் திகதிய 1261 ஆம் இலக்க அட்டோர்ணி தத்துவத்தை இத்தால் இரத்துச்செய்து செல்லுபடியற்றதாக்குகிறேன் என இத்தால் இலங்கை அரசாங்கத் துக்கும் பொது மக்களுக்கும் அறிவிக்கிறேன்.

ஏ. ஆர். எம். நந்தாகுமாரி.

8-608

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 பிரிவுக்கமைய லங்கா பிசினஸ் கொலிஷன் ஒன் எச்ஐவி அன்ட் எய்ட்ஸ் 2009, யூலை 24 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.

கம்பனியின் பெயர் : லங்கா பிசினஸ் கொலிஷன் ஒன் எச்ஐவி என்ட் எய்ட்ஸ்
பதிவு இலக்கம் : ஜீஏ 2285
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 216, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கோர்பரேட் சேர்விசஸ் லிமிட்டெட்,
செயலாளர்கள்.

8-646

---

## பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவுக்கமைய இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : யொகொம் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ68421
பதிவுசெய்யப்பட்ட விலாசம் : இல. 10, ஞானார்த்த பிரதீப மாவத்தை, கொழும்பு 08

சபையின் கட்டளைப் பிரகாரம்.

8-658/1

---

## பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவுக்கமைய இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : மெக்வூட்ஸ் இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ68239
பதிவுசெய்யப்பட்ட விலாசம் : இல. 10, ஞானார்த்த பிரதீப மாவத்தை, கொழும்பு 08

சபையின் கட்டளைப் பிரகாரம்.

8-658/2

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) பிரிவின்கீழ்-

கம்பனியின் பெயர் : ப்ளூ ஷிப் டெக்னிகல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ68477
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009.07.17
கம்பனியின் பதிவு அலுவலகத்தின் முகவரி : இல. 110, நாவல றோட், நுகேகொடை

செயலாளர்கள்.

8-663

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(1) பிரிவின்கீழான பகிரங்க அறிவித்தல்.

கம்பனியின் பெயர் : ஒறியன்ட் எகடமி லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீபி3738
கம்பனியின் முகவரி : இல. 100/1, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை, ராஜகிரிய

சீ. எஸ். இமானுவல்,
கம்பனியின் செயலாளர்.

2009,யூன் 23.

8-665

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளின்கீழ் கீழ்க்காணும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக் கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

*கம்பனியின் பெயர்* : செறண்டிப் அக்றிகள்சர் டெக்னொலொஜீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2009, யூலை மாதம் 22 ஆந் திகதி
*கம்பனியின் இலக்கம்* : பீவீ68523
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : ஜீஏ 202, வித்தியானந்த மாவத்தை, நியூ டவுன், அம்பாறை

எக்கௌண்டின் அன்ட் எலைட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

8-666

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளின்கீழ் கீழ்க்காணும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக் கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : எர்மலோ விலாஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2009, ஓகத்து மாதம் 04 ஆந் திகதி
*கம்பனியின் இலக்கம்* : பீவீ68682
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : சலெம் எஸ்டேட், போகமுவ, போயகனே, குருணாகலை.

எக்கௌண்டின் அன்ட் எலைட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

8-667

---

### கம்பனிகள் பதிவு பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(1) பிரிவின் நிமித்தம் கீழ்வரும் கம்பனிகள் பதிவுசெய்யப்பட்ட விவரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : கூறூக் ஓய மல்லந்த மினி ஹய்ட்றோ பவர் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ66954
*கம்பனி பதிவுசெய்யப்பட்ட திகதி* : 2009.02.03
*பதிவுசெய்யப்பட்ட விலாசம்* : இல. 702, ஹில்ட்டன் கொழும்பு ரெஸிடன்ட்ஸ், 200, யூனியன் வீதி, கொழும்பு 02

*கம்பனியின் பெயர்* : யுனைட்டட் க்ளோதிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ66813
*கம்பனி பதிவுசெய்யப்பட்ட திகதி* : 2009.01.20
*பதிவுசெய்யப்பட்ட விலாசம்* : இல. 12, அப்துல் கபூர் மாவத்தை, கொழும்பு 03

*கம்பனியின் பெயர்* : பென்றொஸ் மினி ஹய்ட்றோ பவர் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ66851
*கம்பனி பதிவுசெய்யப்பட்ட திகதி* : 2009.01.23
*பதிவுசெய்யப்பட்ட விலாசம்* : இல. 702, ஹில்ட்டன் கொழும்பு ரெஸிடன்ட்ஸ், 200, யூனியன் வீதி, கொழும்பு 02

சீ. ஏ. எஸ். கோப்பரேட் சேர்விஸஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

8-672

---

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனி பற்றிய அறிவித்தல்

*கம்பனியின் பெயர்* : ஈகிள்ஸ் பிளையிங் எக்கடமி (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ68510
*பதிவுசெய்யப்பட்ட திகதி* : 2009, யூலை 21
*முகவரி* : விமானப்படை தலைமை அலுவலகம், சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 2

செயலாளர்.

8-693

---

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

9(1) ஆம் பிரிவின் பிரகாரம் தரப்படும் அறிவித்தல்

*கம்பனியின் பெயர்* : மேர்கன்ரைல் எக்ஸ்சேன்ச் லங்கா லிமிட்டெட்
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2009, யூலை 17
*பதிவு இல.* : பீபி3750
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 621/3ஏ, மாக்கொல வடக்கு, மாக்கொல

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி.

8-730

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணைகள் குத்தகைக்கு விற்றல்- 2010

*1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதியிடப்பட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும், ஏற்புடையதான பிற நாட்டு நடைமுறைக்கு வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2010 ஆம் ஆண்டில் பிறநாட்டுக் குடிவகைகள் சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2009.09.15 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் காணப்படும் பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்,*

*(அ) கேள்விக்காரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழையும் கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். கேள்விப்பத்திரங்களையும் மற்றும் சொத்துக்களைப் பற்றிய சான்றிதழையும் முன்வைக்கும் கேள்விக்காரர்கள் மேற்படி பிறநாட்டு குடிவகைகள் தவறணைகளை விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைக் கொத்தில் அடங்கியுள்ள நியதிகளை முறையாக கடைப்பிடிக்க வேண்டும் என இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகிறது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும் போது கேள்விப்பத்திரக்காரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-*

*(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும் போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை எண்ணில் மாத்திரம் அன்றி எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.*

*(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;*

*(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்க கையொப்பமும் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.*

*இங்கு வேண்டப்படும் தேவைகளுக்கு உட்படாத கேள்விப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.*

***3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரம் -***

*(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டுடனும் ;*

*(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும் இணைத்து கடித உறையொன்றில் இட்டு, முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தவறணையின் இலக்கமும் பெயரும் குறித்த உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவடைவதற்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.*

*4. ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருக்க வேண்டும்.*

*5. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரரின் ''சிறப்புரிமைகளை வாங்கியவர்'' என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும். பணத்தொகையொன்றை பிணைப்பணமாக உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய பிறநாட்டுக் குடிவகை தவறணைகள் விற்பனைச் செய்யும் நிபந்தனைக்கொத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ''கொடுப்பனவுக்காக'' எனக் குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட ''பாதுகாப்பான காசோலை'' என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினாலோ அல்லது அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும்.*

6. மேற்குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய இயலாத தவறணை குத்தகைகள் 2009.11.10 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனைக்கு விடப்படும். அன்றைய தினம் கேள்விகள் முன் வைப்பதற்கான தேவைப்பாடுகள் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

7. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் கேட்டு அறிந்துக்கொள்ளலாம்.

பீ. எம். நிமல் பாலசூரிய,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த.

உடபலாத்த பிரதேச செயலகம்,
கம்பளை,
2009, ஓகத்து 11.

**அட்டவணை**

**கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவிற்குள் அங்கீகரிக்கப்பட்ட பிறநாட்டு குடிவகைகள் தவறணைகளின் பட்டியல் – 2010**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறந்திருக்க வேண்டிய நேரம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. புஸ்ஸல்லாவ | உடபலாத்த | புஸ்ஸல்லாவ நகர எல்லைக்குள் | மு. ப. 11.00 மணியிலிருந்து பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணியிலிருந்து பி. ப. 8.00 மணி வரை | 2009.09.15 மு. ப. 10.30 மணிக்கு | 3,000 |

8-584/2

---

**அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வெளிநாட்டு மதுபான தவறணை குத்தகைக்கு விற்பனை – 2010**

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதியிட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளதும் 1983 ஆம் ஆண்டிலும் அதற்கு பிந்திய கால எல்லைக்குள் இங்கு காணப்படும் அடட்வணையில் குறிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு மதுபான தவறணைகள் (தானியங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் தேசிய பான வகைகளும் அடங்கலாக) 2010 ஆம் காலப்பகுதிக்குள் குத்தகைக்கு கொடுத்தல் நிபந்தனைகளுக்கமைய வெளிநாட்டு மதுபான தவறணைகள் (தானியங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் தேசிய பான வகைகளும் அடங்கலாக) தனிநபருக்கான சில்லறை விற்பனைக் குத்தகைக் கொடுப்பனவுக்கான உத்தரவுபத்திரம் வழங்கவதற்கான கேள்விகள் 2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள நேரம் வரை அம்பகமுவ பிரதேச செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. (அ) அனைத்து கேள்விப்பத்திரங்களும் ஏதேனும் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட முறையான விண்ணப்ப படிவமாக இருத்தல் வேண்டும்.

(ஆ) நிரந்தர வைப்பு பணமாக அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலகத்திலானது செலுத்தி அதன் பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.

(இ) மேலதிக அரசாங்க அதிபரால்/பிரதேச செயலாளரால் வழங்கிய, கேள்வி தாளில் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சிப்பத்திரம் கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அசைவற்ற ஆதனங்களின் அத்தாட்சிப்பத்திரத்தை சமர்பிக்கும் போது வெளிநாட்டு மதுபான தவறணைகள் நிபந்தனைகளுக்குட்பட்டவராக கேள்விதாரர் இருத்தல் வேண்டும்.

(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும்போது கேள்விதாரர் கீழ்காணும் முக்கியத்துவங்களை கருத்தில் கொள்ள வேண்டும்:-

(1) கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித்தொகை எழுத்திலும், இலகக்த்திலும் குறிப்பிடல் வேண்டும் ;

(2) பூரண்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரமானது கையொப்பமிடும் சாட்சிகளது தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும் ;

(3) கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படின் கேள்விதாரரின் முழுமையான கையொப்பத்தையும், திகதியையும் உறுதிப்படுத்தல் வேண்டும்;

(4) சிறப்புரிமை பெற்ற கேள்விதாரர்கள் தமது தேசிய அடையாள அட்டையை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

நிபந்தனைகளுக்கு உட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

3. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம் கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டு பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்படட கடித உறையின் இடது மேல் மூலையில் தவறணைக்கான பெயரையும், இலக்கத்தையும் குறிப்பிட்டு அம்பகமுவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் கேள்விகள் செய்யப்படவேண்டிய கால எல்லைக்குள் இடப்பட வேண்டும். தபாலில் கேள்விகளை சமர்ப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட கால எல்லை முடிவடைவதற்குள் பதிவு தபாலில் அம்பகமுவ பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிக் கால எல்லை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நேரத்திற்கு கேள்விக்காரர்கள் பிரதேச செயலகத்திற்கு சமூகமளிக்க வேண்டும்.

5. எந்த ஒரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ மறுக்கவோ பிரதேச செயலாளருககு அதிகாரம் உண்டு.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர்கள் விற்பனை தினத்தன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன் அம்பகமுவ பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட மூன்று மாத விற்பனைக்கு குறையாத பிணைப்பணமாக அம்பகமுவ பிரதேச செயலகத்தில் செலுத்த வேண்டும். மேற்படி வைப்புப் பணம "பிரதேச செயலாளர்" என்ற பெயரில் கினிகத்தேனை மக்கள் வங்கியில் நிரந்தர சேமிப்பு கணக்கில் வைப்புச் செய்ய குத்தகைக்காரர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணம் காசோலை அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்பட்ட பாதுகாப்பான காசோலை மூலமாகவோ செலுத்தப்பட வேண்டும். தேவையான முத்திரைகளை செலுத்தி குத்தகைக்காரர்கள் நிபந்தனைகளினதும் ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடல் வேண்டும்.

7. நியமிக்கும் தவணைக் கட்டணம் மாதாந்தம் காசாக செலுத்துபவர் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

8. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியையும் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

9. மேற்படி திகதியில் குத்தகைத் தவறணைகள்கொடுக்கப்படாத பட்சத்தில் 2009.10.30 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீள் விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு கொடுப்பது சம்பந்தமாக முடிவான தீர்மானம் பிரதேச செயலாளருடையதாகும்.

11. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் அம்பகமுவ கோரளை பிரதேச செயலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

டபிள்யு. எம். குணவர்தன,
பிரதேச செயலாளர்,
அம்பகமுவ கோரளை.

அம்பகமுவ கோரளை,
பிரதேச செயலகம்,
2009, ஓகத்து .

**அட்டவணை**

| இலக்கமும் தவறணையின் பெயரும் | தவறணை நிறுவப்பட வேண்டிய இடம் | கேள்விப்பத்திரம் பெறப்படும் காலஎல்லை | பிணைப்பணம் ரூபா |
|---|---|---|---|
| 1. நோர்வுட் | நோர்வுட் நகர எல்லையில் 3 ஆம் இலக்க வட்டாரத்திற்குட் பட்ட பிரதேசம் | 2009.09.07 மு. ப. 10.30 | 3,000 |
| 2. டிக்கோயா | ஹட்டன் டிக்கோயா நகர எல்லையில் 4 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் பிரதேசம் | 2009.09.07 மு. ப. 10.30 | 3,000 |
| 3. டிக்கோயா | ஹட்டன் டிக்கோயா நகர எல்லையில் 5 ஆம் இலக்க வட்டாரத்திற்குட்பட்ட பிரதேசம் | 2009.09.07 மு. ப. 10.30 | 3,000 |

8-626

**கண்டி மாவட்டத்தில் தெல்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணை குத்தகை விற்பனை - 2010**

*1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசித்தப்படுத்தப்பட்டுள்ள 1983 ஆம் ஆண்டு மற்றும் அதன் பிறகான காலம் தொடர்பான வெளிநாட்டு மதுபான சில்லறை விற்பனை சட்டதிட்டங்களுக்கு அமையவும், இக்காலத்தில் செல்லுபடியாகும் அனைத்து வருமான வரி அத்தாட்சிப்பத்திரங்களுக்கும் செல்லுபடியாகும் பொது விற்பனைவரி சட்ட திட்டங்களுக்கு அமையவும், மதுபானம் சில்லறையாக விற்பதற்கான வரப்பிரசாதமொன்றை விலைக்கு வாங்குவதற்காக தெல்தோட்டை பிரதேச செயலாளர்/ மேலதிக அரசாங்க அதிபரான என்னால் 2009.09.11 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. அனைத்து கேள்வியிலும் இலங்கையில் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியுமான விண்ணப்பப்படிவம் தயார் செய்யப்பட வேண்டுவதுடன்,*

*(அ) கேள்வி முற்பணம் என்ற வகையில் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பின்வரும் துணைப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் திடமான கேள்வி பிணைத் தொகையை வைப்பில் இட்டு அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டையும் ;*

*(ஆ) கேள்வியாளரின் சொத்துக்கள், அவை அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடத்தில் பெற்றுக்கொண்ட சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை முன்வைத்தல் வேண்டும்.*

*3. கேள்வி மற்றும் சொத்துக்கள் உறுதிப்பத்திரம் முன்வைப்பது தொடர்பாக குறிப்பிட்ட வெளிநாட்டு மதுபான தவறணை குத்தகைக்கு விற்றல் சட்டதிட்டங்களில் அடங்கும் சட்டங்கள் ஒழுங்கு முறையாக பின்பற்றப்படவேண்டுமென்று கேள்வி முன்வைப்போரிடத்தில் மிகக்கடுமையாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கேள்விப்பத்திரம் பூரணப்படுத்துவதில் கேள்வியாளர் பின்வரும் தேவைகள் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும்.*

(i) *கேள்விப்பத்திரத்தை முழுமையாக பூரணப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் போது அங்கு குறிப்பிடப்பட்டுள்ள பணத்தை இலக்கத்தில் மட்டுமன்றி எழுத்திலும் எழுத வேண்டும் ;*

(ii) *பூரணப்படுத்தப்பட்டுள்ள கேள்வி விண்ணப்பப்பத்திரத்தில் சாட்சியாளரின் கையெழுத்து இடப்பட்டிருக்க வேண்டும் ;*

(iii) *மாற்றங்கள் செய்யும் அனைத்திலும் சொற்கள் திருத்துவதிலும் கேள்வியாளரின் சுருக்க கையொப்பமும் திகதியும் இட்டு அத்தாட்சிப்படுத்தியிருக்க வேண்டும். அங்கு தேவைகளுக்கு முரணாக முன்வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.*

*4. முறையாக முன்வைக்கப்படுகின்ற கேள்விப்பத்திரம் :*

*(அ) பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் சமர்ப்பிக்கப்பட்டு பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு :*

*(ஆ) சொத்து விவரணம் தொடர்பான அத்தாட்சி.*

*ஆகியவற்றுடன் கடித உறையொன்றிலிட்டு முத்தரையிட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "தவறணை இலக்கமும் பெயரும்" குறிப்பிடப்பட்டு தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைவதற்கு முன்னர் இடப்படவேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து தெல்தோட்டை பிரதேச செயலாளருக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.*

*5. குத்தகைக்காக கேள்வி ஏற்றுக்கொள்வது முடிவடையும் நேரம் மேலே குறிப்பிட்டுள்ள 1 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நேரத்தில் அனைத்து கேள்வியாளர்களும் தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் சமுகமளிக்க வேண்டும்.*

*6. திருப்தியாக கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்வியாளர் "சிறப்புரிமைகளை வாங்கியவர்கள்" என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு தெல்தோட்டை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக தெல்தொட்டை பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய கள்ளுத்தவறணைகள் நிபந்தனைக் கொத்தில் கையொப்பமிட வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 'கொடுப்பனவுக்காக' குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியிலோ வழங்கப்பட்ட 'பாதுகாப்புக்கான காசோலை' என அழைக்கப்படும் காசோலையினாலோ செலுத்தப்படல் வேண்டும்.*

*7. கள்ளுத் தவறணைகளினாலோ வேறு வலுவுடைய அனுமதிப்பத்திரங்களை உடைய வேறு வியாபார நிலையங்களினாலோ விற்பனைக்காக மொத்தமாக (பீப்பாய்க்கணக்கில்) கள்ளுக்குடி வகைகள் விநியோகிக்கப்பட மாட்டாது என்பதை கவனத்திற்கொள்ளவும்.*

8. தற்போது வெளிநாட்டு மதுபான விற்பனை செய்யும் குறிப்பிட்ட இடத்தில் தொடர்ந்தும் விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

9. பாதுகாப்பு காரணமாகவோ அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்படுகின்றதாலோ வேறு ஏதும் காரணங்களினாலோ வெளிநாட்டு மதுபான தவறணை தற்காலிகமாக முடிவிடுவதற்குரிய கட்டளையொன்று பிறப்பிப்பதற்கு எனக்கு ஏற்பட்டால் அவ்வாறு தவறணையை முடிய காலம் தொடர்பாக குத்தகை வாரத்தில் சலுகை ஏற்பாடு ஏதும் செய்யப்படமாட்டாது.

10. மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யமுடியாது போன தவறணைக் குத்தகைகள் 2009, நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும் அன்றைய தினம் கேள்விப்பத்திரங்கள் முன்வைப்பதற்கான தேவைப்பாடுகள் வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

11. அதற்கு முன்னர் வெளிநாட்டு மதுபானசாலையொன்றை நடாத்திச் சென்றது தொடர்பாக அரசாங்கத்திற்கு ஏதும் ரொக்கப்பணம் கொடுக்க வேண்டியிருந்தால் கேள்வியை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் அந்த மிகுதி ரொக்கப்பணத்தை கொடுத்து பூரணப்படுத்தப்பட வேண்டும்.

12. மேலதிக விவரங்களை இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

எஸ். பாலசுப்பிரமணியம்,
பிரதேச செயலாளர்,
தெல்தோட்டை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
தெல்தோட்டை.

அட்டவணை

**கண்டி மாவட்டத்தில் தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்தின் அனுமதியளிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணை பட்டியல் - 2010**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரதேச செயலாளர் பிரிவு | தவறணை அமைக்கப்பட வேண்டிய பிரதேசம் | தவறணை திறக்கப்படும் நேரம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| வெளிநாட்டு மதுபானசாலை | தெல்தோட்டை | தெல்தோட்டை கரகஸ்கட வடக்கு கிராம சேவகர் பிரிவிற்குள் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரையும் பி.ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 2009.09.11 ஆந் திகதி மு. ப. 10.30 மணி |

வெளிநாட்டு மதுபான தவறணையின் குத்தகை விற்பனைக்கான சேமிப்பாக வைக்கப்படவேண்டிய தொகை ரூபா 1,000 ஆகும்.

8-644

---

## கண்டி கடவத்சத்தர கோரளை பிரதேச செயலாளர் பிரிவிற்குள் பிறநாட்டு குடிவகைகள் குத்தகைக்கு விற்றல் - 2010

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதியிட்ட 207 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்பட்ட (பிரசுரிக்கப்பட்ட) 1983 ஆம் வருடத்திற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதாக பிறநாட்டு குடிவகைகள் தவறணைகள் குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும் அக்காலப்பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2010 ஆம் வருடத்தில் பிறநாட்டு குடிவகைகள் சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளராகிய என்னால் 2009.09.10 ஆந் திகதி முற்பகல் 10.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் காணப்படும் பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்,

(அ) கேள்வி வைப்பு பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட குறித்த கேள்விப்பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும் ;

(ஆ) கேள்விக்காரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் செயலாளரினால் பெற்றுக்கொண்ட தனது சொத்துக்கள் பற்றிய சான்றிதழும் கேள்விப்பத்திரத்துடன் முன்வைக்கப்படல் வேண்டும்.

கேள்விகளையும் சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் முன் வைக்கும் கேள்விக்காரர்கள் மேற்படி பிறநாட்டு குடிவகைள் தவறணைகளை விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைக் கொத்தில் அடங்கிய கட்டளைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும் போது கேள்விக்காரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும் போது அங்கு குறிப்பிடும் தொகையை எண்ணில் மாத்திரமன்றி எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருந்தலும் கேள்விக்காரரின் சுருக்க ஒப்பந்தத்துடன் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

(iv) பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரத்தை கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட-

(அ) பிரதேச செயலகப் பற்றுச்சீட்டுடனும்,

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும்

இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அந்த கடித உறையின் இடதுபக்க மேல் முனையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறிப்பிடப்பட்டு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிடின் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவதற்கு முன்பு கண்டிப் பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. ஒரு குத்தகை:க தொடர்பாக கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விக்காரரும் கண்டி பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. திருப்தியாக கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரர், சிறப்புரிமைகளை வாங்கியவர் என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய தினம் பி. ப. 2.30 மணிக்கு முன்பு கண்டி பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக, கண்டி பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய பிறநாட்டு குடிவகை தவறணைகள் நிபந்தனைக்கொத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றில் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" என குறிப்பீட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியினாலோ, மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினால் அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

6. பிறநாட்டு குடிவகைகள் தவறணைகளினாலோ வேறு வலுவுடைய அனுமதிப்பத்திரங்களையுடைய நிலையங்களினாலோ விற்பனைக்காக மொத்தமாக (பீப்பாய்க்கணக்கில்) பிறநாட்டு குடிவகைகள் விநியோகிக்கப்பட மாட்டாது என்பதை கவனத்திற் கொள்ளவும்.

7. பாதுகாப்பு காரணமாக கண்டி எசல பெரஹரா நடைபெறும் காலங்களில் இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் இல. 01 உள்ள பிறநாட்டு குடிவகைகள் தவறணையை தற்காலிகமாக மூடுவதற்குரிய கட்டளையை என்னால் பிறப்பிக்க வேண்டி ஏற்பட்டால் அவ்வாறு தவறணையை மூடிய காலம் தொடர்பாக குத்தகை வாரத்தில் சலுகை ஏற்பாடு ஏதும் செய்யப்படமாட்டாது.

8. குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய முடியாது போன பிறநாட்டு குடிவகை தவறணை குத்தகைகள் 2009.11.05 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும் . அன்றைய தினம் கேள்விகளை இவ்வர்த்தமானப் பத்திரகையில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு முன்வைத்தல் வேண்டும்.

9. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

டீ. எம். எஸ். பண்டார தென்னகோன்,
பிரதேச செயலாளர்,
கண்டி கங்கவட்ட கோரளை

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை,
2009.08.04.

**அட்டவணை**

***கண்டி மாவட்டத்தில் அனுமதியளிக்கப்பட்ட பிறநாட்டு குடிவகை தவறணைகளின் பட்டியல்- 2010***

| *தொடர் இலக்கமும் பெயரும்* | *பிரிவு* | *தவறணையை அமைக்கவேண்டிய பிரிவு* | *தவறணை திறந்திருக்கும் நேரம்* | *கேள்விப் பத்திரங்களை (டென்டர்) ஏற்றுக்கொள்ளும் கடைசி திகதியும் நேரமும்* |
|---|---|---|---|---|
| இல. 01 கொழும்பு வீதி | 1. கண்டி நகரத்தில் இல. 17 யட்டி நுவர மற்றும் இல. 18 கொட்டுகொடல்லை வீதி | கண்டி நகரத்தில் இல. 17 யட்டிநுவர மற்றும் இல. 18 கொட்டு கொடல்ல வாக்கெடுப்பு பிரிவுக்குள் கொழும்பு வீதி மற்றும் காசல் ஹில் வீதி சந்தியிலிருந்து கொழும்பு வீதி, வடுகொடபிட்டிய பாதையில் சந்திக்கு இடையில் கொழும்பு வீதி இரு மருங்கிலும் | மு. ப. 11.00 தொடக்கம் பி. ப. 2.00 மணிவரை மற்றும் பி. ப. 5.00 தொடக்கம் பி. ப. 8.00 மணி வரை | 2009.09.10 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை |

*இல. 01 - பிற நாட்டு குடிவகை தவறணைகள் குத்தகைக்கான கேள்விப்பத்திர வைப்புப்பணம் - ரூபா 5,000*

*8-700/2*

# ஏல விற்பனைகள்

**மக்கள் வங்கி - இமதுவ கோட்டை கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டம் 29டி அதிகாரத்தின்கீழ் விற்பனை அறித்தல்*

**சொத்துக்கள் ஏல விற்பனை**

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி என்னால் இங்கு கீழ் கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள், சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தில் 2009.09.18 ஆந் திகதி மு.ப 11.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்**

1. தென் மாகாணத்தின், காலி மாவட்டத்திலே தல்பே பத்துவைக்குள் பக்மீகஹ வத்த அல்லது மனமல்கஹ வத்த என்ற காணியின் அதிகாரம்பெற்ற அளவையாளர் எம். என். ஜே. ஏ. பெரேரா அவர்களினால் 2006.10.15 ஆந் திகதி அளந்து ஒழுங்குசெய்யப்பட்ட 604 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பதினொன்று தசம் இரண்டு ஒன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 11.21பே.) என்ற மிகப்பெரிய இலக்கம் 2 என்ற துண்டும் அங்குள்ள பயிர்ச்செய்கை உட்பட பழவர்க்கங்கள், கட்டிடம் அனைத்தும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2008.07.11 ஆந் திகதிக்குரிய அரச வர்த்தமானப் பத்திரிகையிலும் 2008.10.22 ஆந் திகதிய ''தினமின'', ''தினகரன்'', ''டெய்லிநியூஸ்'' போன்ற சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப் பட்ட ஏலவிற்பனைப் பகுதியை கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**- காலி, மாத்தறை, உனவடுன வெல்லே தேவாலை சந்தியிலிருந்து வலப்பக்கமாக உள்ள வெல்லே தேவாலை வீதியில் 1 1/4 கி. மீ. அளவு செல்ல யத்தெஹிமுல்ல வீதியில் இச்சொத்துக்கள் அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- வெற்றிபெற்ற கொள்வன வாளரினால் இறுதியில் கீழ் கண்டபடி பணமாக செலுத்தல் வேண்டும் :

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) மாகாண அதிகாரியின் வரியாக மாகாண அதிகாரிக்கு விற்பனை விலையில் 1% ;
(3) ஏல விற்பனையாளர் தரகு என கொள்வனவு விலையில் 2 1/2% ;
(4) இலிகிதர்,அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவும் வேறு கட்டணம் இருப்பின் அப்பணமும் ;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான பணத்தை விற்பனைத்திகதியில் இருந்து 30நாட்களுக்குள் காலி பஹல டிக்சன் வீதியில் இல.22 என்ற நிலையத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் பிரதேச பிரதான அலுவலகத்தில் பிராந்திய முகாமையாளர்

அவர்பளுக்கு செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 091-2232311, 2234785, 2234171, 2223564 ; பெக்ஸ் இல. : 091-2232230.

மேற்குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்த தவறினால் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 10%தை திரும்பவும் செலுத்தாது, மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமைகோரும் ஒப்பினையையும் வேறு குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.

ஜீ. பீ ஆனந்த (சமாதான நீதவான்),
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம, மாத்தறை.
தொலைபேசி இல. : 041-2228731,071-4438516

8-649

---

## டீஎப்சிசி வர்தன வங்கி லிமிட்டெட்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிக்கடன் மீட்பு சட்டத்தின் (விஷேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை

### பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை

*(குளியாப்பிடடி பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். என். சி. ஜயக்கொடி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2007 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதியிடப்பட்ட, 423 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் கொபய்கனேயைச் சேர்ந்த விக்கிரம ஆரச்சிகே இந்திரா துஷாரமாலி குணதிலக அவர்களால் டீஎப்சிசி வர்தன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

டீஎப்சிசி வர்தன வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**423 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விவரணம்**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தேவமெதி ஹத்பத்துவில் போலதொர கோரளே, ஹிறிகொல்ல கிராமத்தில் அமைந்துள்ள கொஸ்கஹமுலவத்த எனவும் அம்பகஹமுலவத்த எனவும் பெலேட்டி வத்த எனவும் அழைக்கப்படும், அனுமதிப்பத்திரம்பெற்ற நில அளவை யாளர் எஸ். எம். திசாநாயக்க அவர்களால் வரையப்பட்ட,1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆந் திகதியிடப்பட்ட 4736 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 03 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணி அதிலுள்ள மண் மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலாக

(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 27.6பே.)

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப்பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5 % (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவான ரூபா 35,000 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு வீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படு கின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விவரங்களுக்கு.**- 011-2440366/77 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சிசி வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகரம் கொண்ட ISO 9001 : 2000 தரச் சான்றிதழ் பெற்ற ஒரேயொரு பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர், பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும் காணித் தரகர்.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும், காட்சியறையும்: |
| 24, டொரிங்டன் வீதி, | 290, ஹவ்லொக் றோட், |
| கண்டி, | கொழும்பு 5. |
| தொலைபேசி : 081 – 2227593 | தொலைபேசி இல. : 011 - 2502680, 011 - 2585408, |
| தொலை/பக்ஸ் 081 – 2224371 | தொலை./பக்ஸ் : 011 – 2588176 |
| மின் அஞ்சல் : schokman kandy@sltnet.lk | மின் அஞ்சல் : schokman@ samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme.com

8-668

---

## டீஎப்சிசி வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிக்கடன் மீட்பு சட்டத்தின் (விஷேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை

### பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை

**737 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விவரணம்**

*(பொலன்னறுவ பிரசித்த நொத்தாரிசு ஏ. ஏ. அபேவர்தன அவர்களால் 2007 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதியன்று உறுதிப்படுத்தப்பட்ட, 737 ஆம் இலக்க பிணை உறுதி மீதான வருமதியான கொடுப்பனவு தவணை தவறியதால், சுனில் ஹோம் பில்டர்ஸ் அன்ட் டிசைனிங் அஸோஸியேட்ஸ் என்ற பெயரில் வியாபாரத்தை தனி உரிமைத்து வத்துடன் நடத்திவரும், பொல்கஹவெலயைச் சேர்ந்த வர்ணகுலசூரிய சுனில் பிரியந்த பெர்னாண்டோ என்பவரால் டீஎப்சிசி வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

டீஎப்சிசி வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் பிரிவு இறைவரி அலுவலர் எல்லைகளுக்கு உட்பட்ட முன்னேஸ்வரம் பத்து, மெரவெல கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த மெரவெலயில் அமைந்துள்ள புரூக்சைட் வத்த என அழைக்கப்படும் அளவையாளர் நாயகம் அவர்களால் அளவை செய்யப்பட்ட மற்றும் அவர் வசமுள்ள பீபீஏ 1704 ஆம் இலக்க வெளிக்களப் பத்திரத்தில் காணித்துண்டு 72 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட காணித்துண்டு (மீள் அளவை செய்யப்பட்டதற்கிணங்க, மேலே குறிப்பிடப்பட்ட மெரவெல கிராமத்தில் அமைந்துள்ள புரூக்சைட் வத்த என அழைக்கப்படும், அளவையாளர் நாயகம் அவர்களால் வரையப்பட்ட மற்றும் அனுமதிப்பத்திரம்பெற்ற நில அளவையாளர் எம். எம். டி. டன்ஸ்டன் பெரேரா அவர்களால் மீள்குறிக்கப்பட்ட, ஏ1704 ஆம் இலக்க பூர்வாங்க வரைபடத்தில் காணித்துண்டு 72 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட காணித்துண்டு) அதிலுள்ள அனைத்தும் உள்ளடங்கியதாக

(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 7பே.)

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப்பணமாகச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 .5 % (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவான ரூபா 34,500 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு வீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 011-2440366/77 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சிசி வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகரம் கொண்ட ISO 9001 : 2000 தரச் சான்றிதழ் பெற்ற ஒரேயொரு பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர், பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும் காணித் தரகர்.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும், காட்சியறையும்: |
| 24, டொரிங்டன் வீதி, | 290, ஹவ்லொக் றோட், |
| கண்டி, | கொழும்பு 5. |
| தொலைபேசி : 081 – 2227593 | தொலைபேசி இல. : 011 - 2502680, 011 - 2585408, |
| தொலை/பக்ஸ் 081 – 2224371 | தொலை./பக்ஸ் : 011 – 2588176 |
| மின் அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின் அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme.com

8-669

**டீஎப்சிசி வர்தன வங்கி லிமிட்டெட்**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிக்கடன் மீட்பு சட்டத்தின் (விஷேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

*(குருநாகல் பிரசித்த நொத்தாரிசு டி. எஸ். ஐ. வெத்தேவ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதியிடப்பட்ட, 4159 மற்றும் 4160 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் குருநாகலைச் சோந்த நவீந்திர கலப்பத்தி அவர்களால் டீஎப்சிசி வர்தன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

டீஎப்சிசி வர்தன வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கும் பி. ப. 2.00 மணிக்கும் தனித்தனியாக எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

***4160 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விபரம்***

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தம்பதெனி ஹத்பத்துவில், ரெகோபத்து கோரளே, உஹுமிய மற்றும் பம்பே கிராமங்களில் மற்றும் தேவமெதி ஹத்பத்துவில், தேவமெதி உடுகஹ கோரளே, மொறகொல்ல கிராமத்தில் அமைந்துள்ள குளோவீஸ் எஸ்டேட் என அழைக்கப்படும் காணித்துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம்பெற்ற நில அளவையாளர் எஸ். கே. தென்னேகெதர அவர்களால் வரையப்பட்ட, 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23ஆந் திகதியிடப்பட்ட 1208ஏ/07 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட காணி அதிலுள்ள மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலாகவும் அத்துடன் இந்தக் காணிக்கென வரையறை செய்யப்பட்டுள்ள நீர்கொழும்பு நோக்கிப் பயணஞ் செய்யக்கூடிய 20 அடி அகலமான பாதையை பொதுவாக பாவிப்பதற்கும் பராமரிப்பதற்குமான உரிமையுடன் ஏலவிற்பனை**

***(காணியின் விஸ்தீரணம் : (10ஏ. 02றூ. 08.3பே.)***

***4159 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விபரம்***

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேஉடவில்லி ஹத்பத்துவில், திரகந்தஹயே கோரளே, குருநாகல் நகரசபை எல்லைகளுக்கு உட்பட்ட வெலன்கொல்ல கிராமத்தில் அமைந்துள்ள வெலன்கொல்ல எஸ்டேட் என அழைக்கப்படும், அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். ஜி. ரணசிங்க அவர்களால் வரையப்பட்ட, 2003 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதியிடப்பட்ட 1625/ஏ ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 105 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட காணி அதிலுள்ள மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலாகவும் அத்துடன் 1525 ஆம் இலக்க காணித்துண்டு 04 மற்றும் 1625/ஏ ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டுகள் 110, 111, 112, 113, மற்றும் 114 ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ள பாதையைப் பொதுவாகப் பாவிக்கும் மற்றும் பராமரிக்குமான உரிமையுடன்**

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 10.65பே.)***

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப்பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5 % (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவான ரூபா 34,500 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு வீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படு கின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விவரங்களுக்கு**.- 011-2440366/77 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சிசி வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம் கொண்ட ISO 9001 : 2000 தரச் சான்றிதழ்
பெற்ற ஒரேயொரு பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும் காணித் தரகர்.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும், காட்சியறையும்: |
| 24, டொரிங்டன் வீதி, | 290, ஹவ்லொக் றோட், |
| கண்டி, | கொழும்பு 5. |
| தொலைபேசி : 081 – 2227593 | தொலைபேசி இல. : 011 - 2502680, 011 - 2585408, |
| தொலை/பக்ஸ் 081 – 2224371 | தொலை./பக்ஸ் : 011 – 2588176 |
| மின் அஞ்சல் : schokman kandy@sltnet.lk | மின் அஞ்சல் : schokman@ samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme.com

8-670

---

## மக்கள் வங்கி – ஹோமாகம கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**காணி (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவகம் கோறளை, மேற்கு பள்ளேபற்று, ஹோமாகமயில் அமைந்துள்ள ''ஹெரலிகஸ் வத்தை'' என அழைக்கப்படும் காணியின் துண்டு 1) அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை (காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 10பே.)**

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி**.- ஹோமாகமை, புகையிரத வீதி வழியே செல்ல வரும் மடவலவில வீதியில் ஏறக்குறைய 600 மீற்றர் செல்ல, வலப்பக்கத்தில் இல. 415/8 ஐக் கொண்டு வளவ்வ வீதியில் இவ்வாதனம் அமைந்துள்ளது. இரு மாடிகளைக் கொண்ட இவ்வீட்டின் தரைத்தளத்தின் பூச்சுவேலைகள் யாவும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2009, செத்தெம்பர் 18 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு**.- 2009.01.30 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2009.07.01 ஆந் திகதிய ''டெய்லி நியூஸ்'', ''தினமின'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ; (2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ; (3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2 % (இரண்டரை வீதம்) ; (4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ; (5) விற்பனை செலவு மற்றும் வேறு கட்டணங்கள் (ஏவையேனுமிருப்பின்) ; (6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ''நுகேகொடை, ஸ்ரேன்லி திலகரத்ன மாவத்தை, இல. 102, பிரதேச தலைமை அலுவலகம்- கொழும்பு (வெளி), மக்கள் வங்கி, உதவிப் பொது முகாமையாளர்'' அவர்களிடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 2825102, 2825101 ; தொலைநகல் இல. : 2817737.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

ஈ. எஸ். ராமநாயக்க,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், உத்தரவுபெற்ற ஏலதாரர்
மற்றும் விலைமதிப்பிடுநர்.

அலுவலகம் :
25பி, பெல்மொண்ட் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. : 011-5756356

இல்லம் :
11/55, குடாபுத்கமுவ,
அங்கொடை,
தொலைபேசி இல. : 011-2419126

8-692

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ – வத்தளை கிளை**

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டிகோறளைபற்று, பழைய தெஹிவளை-கல்கிசை மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள "ரத்மலான" எனும் இடத்தில் அமையப்பெற்ற வரிமதிப்பு இல. 21/5, மடிகல் குரூஸ் வீதி எனும் விலாசத்தில் அமைந்துள்ள குருந்துவத்தை என அழைக்கப்படும் காணி. இது உத்தரவுபெற்ற நிலஅளவையாளரான தோடன்வெல என்பவரால் 2004.10.23 ஆந் திகதி அளவை செய்யப்பட்ட இல. 50, 51 எனும் நிலஅளவை படத்தில் 1 ஆம் இலக்க பிரிவிடப்பட்ட காணித்துண்டு ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 21.50 பேர்ச்சுக்கள்)**

*(கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பி. என். பி. பெரேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2005, செத்தெம்பர் 15 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 1161 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ள கடப்பாடுடையவரான அமரசிங்க அஜித் பெரேராவினால் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சி இற்கு ஈடுவைக்கப் பட்டுள்ள ஆதனம்)*

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- காலி வீதியிலிருந்து இரத்மலானை, பிலாக்கடை சந்தியில் இருந்து இலகுவாக இந்த இடத்தை அடைய முடியும். கொழும்பு நோக்கி வை. எம். பி. ஏ. கட்டிடத்தின் பக்கமாக 400 மீட்டர் தூரம் சென்று இடதுபக்கமாக ரஜமாவத்தை எனும் பாதை அமைந்திருப்பதுடன் சுமார் 50 மீட்டர் தூரம் சென்றால் மடிகல் குறோஸ் பாதை வந்து சேரும். அதிலிருந்து 250 மீட்டர் சென்றால் அப்பாதையில் இடதுபக்கம் இவ்வாதனம் அமைந்துள்ளது.

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆதனத்தை 2009, செத்தெம்பர் 14 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2009.08.21 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2009.08.18 ஆந் திகதிய "ஜலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் வீதம்.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகாரசபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு கட்டணம் ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1,000 ;
(6) விற்பனையில் உறப்பட்ட மொத்த விளம்பரச் செலவுகள்.

கொள்வனவு விலையின் மிகுதி 90%(தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்த வேண்டும்.

சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புகளையும் "தலைமை அலுவலகம், ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, கடன் மேற்பார்வை மற்றும் அறவீடுகள் பகுதி, சிரேட்ட முகாமையாளர்" அவர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும். தொலைபேசி இல. : 011-4764764.

சிரியானி மன்னம்பெரி,
நீதிமன்ற ஆணையாளர் மற்றும் உத்தரவுபெற்ற
ஏலவிற்பனையாளர், மதிப்பீட்டாளர் மற்றும் தரகர்.

இல. 9, பெல்மன்ட் வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி இல. : 011-2320074, 071-3151356.

8-695

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ – வத்தளை கிளை**

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம், பல்லேபற்று, சல்பிட்டி கோறளை, தெஹிவளை-கல்கிசை மாநகரசபையின் எல்லைக்குள் நெதிமாலை கிராமத்தில் அமைந்துள்ள "களகஹவத்த" என அழைக்கப்படும் காணித்துண்டின் அனுமதிபெற்ற நிலஅளவை யாளரான விக்டர் சந்திரதாச என்பவரால் 2004.05.23 ஆந் திகதியிடப்பட்ட 40/2004 ஆம் இலக்கமுடைய "எக்ஸ்" எனும் நிலஅளவை படத்தில் குறிப்பிடப்பட்ட பிரிவிடப்பட்ட காணியும் அதனுள் அமைந்துள்ள அனைத்தும் அடங்கலாக ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 10.02 பேர்ச்சுக்கள்)**

*(கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பி. என். பி. பெரேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2008, ஏப்பிறல் 25 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 4204 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ள கடப்பாடுடையவரான வீரப்பன் அங்கப்பன் சுப்பிரமணியம் மற்றும் சுப்பிரமணியம் மோகனாம்பாள் ஆகியோரால் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சி இற்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- தெஹிவளை சந்தியில் இருந்து ஹில் வீதியினூடாக மகரகமயை நோக்கி 1.4 கி. மீ. தூரத்தில் அமைந்துள்ள (கடவத்தையைத் தாண்டி சுமார் 150 மீட்டர் தொலைவில் உள்ளது) அத்துடன் அஸமாவத்தை என அழைக்கப்படும் ஒழுங்கையின் இடதுபக்கம் அமைந்துள்ளதுமாக ஸோமானந்த பாதைக்கு எதிரே அமைந்ததுமாகும். அத்துடன் தெஹிவளை, ஹில் வீதி, நெதிமாலையில் அமைந்துள்ள வீதியில் இல. 289/2 எனும் இந்த ஆதனத்தை சுமார் 50 மீற்றர் தூரத்தில் சென்று அடையலாம்.

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2009, செத்தெம்பர் 14 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2009.08.21 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2009.08.18 ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் வீதம்.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகாரசபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு கட்டணம் ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1,000 ;
(6) விற்பனையில் உறப்பட்ட மொத்த விளம்பரச் செலவுகள்.

கொள்வனவு விலையின் மிகுதி 90%(தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்த வேண்டும்.

சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

